

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 25-07-2025


# எதிர்ப்புக்குப் பிறகு பின் வாங்கல்!

மும்மொழிக் கொள்கைக்கு நாடு முழுவதும் எதிர்ப்புக் கிளம்பிய நிலையில் பின்வாங்கி இருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

தமிழ்நாட்டைச் சேர்ந்த காங்கிரஸ் மக்களவை உறுப்பினர் மாணிக்கம் தாகூர், மும்மொழிப் பிரச்சினை குறித்து கேள்வி எழுப்பினார். அதற்கு ஒன்றிய கல்வித் துறை இணை அமைச்சர் ஜெயந்த் சவுத்ரி எழுத்துப்பூர்வமாக பதில் அளித்துள்ளார். அதில் ஒன்றிய பா.ஜ.க. அரசின் நிலைப்பாடு மாறி இருக்கிறது. "மும்மொழிக் கொள்கையை மாநில அரசுகளே முடிவு செய்யலாம்" என்று அதில் கூறப்பட்டுள்ளது.

"கல்வி என்பது பொதுப்பட்டியலில் உள்ளதால் மும்மொழிக் கொள்கையைச் செயல்படுத்துவது குறித்து மாநிலத்தின் தேவைகள் மற்றும் பன்முகத் தன்மையைக் கருத்தில் கொண்டு மாநில அரசுகள் சுதந்திரமாக முடிவுகள் எடுக்கலாம். மும்மொழிக் கொள்கையை நெகிழ்வான முறையில் பயன்படுத்தலாம். எந்த மாநிலத்தின் மீதும் எந்த மொழியும் திணிக்கப்படாது. இது குறித்து கல்வியாளர்களுடன் ஒன்றிய அரசு தொடர்ந்து ஆலோசனைகள் செய்து வருகிறது" என்றும் அமைச்சர் ஜெயந்த் சவுத்ரி சொல்லி இருக்கிறார்.

மும்மொழிக் கொள்கை விவகாரத்தில் மற்ற மாநில மொழிக்காரர்களின் கடும் எதிர்ப்பைத் தொடர்ந்து ஒன்றிய பா.ஜ.க. அரசு திடீர் பல்டி அடித்திருப்பதையே இது காட்டுகிறது.

இந்தித் திணிப்புக்கு எதிராகத் தொடர்ந்து போராடி வருகிறது தமிழ்நாடு. அதிலும் குறிப்பாக, தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள், மிகக்கடுமையாக தனது எதிர்ப்பைப் பதிவு செய்து வருகிறார். 18.10.2022 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் இந்தி எதிர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

**"தமிழ்நாட்டின் மொழிக் கொள்கை என்பது, தமிழும், ஆங்கிலமும் என்ற இருமொழிக் கொள்கை. தமிழ் மொழி இந்திய அரசின் ஆட்சிமொழிகளில் ஒன்றாக ஏற்கப்பட வேண்டும். மாநில ஆட்சி மொழிகள் அனைத்தும் இந்திய அரசின் ஆட்சிமொழியாக ஆக வேண்டும். இந்தி பேசாத மாநில மக்கள் மீது இந்தி மொழி எந்த வகையிலும் திணிக்கப்படக் கூடாது. இந்தி பேசாத மாநில மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் தொடர வேண்டும். சென்னை உயர்நீதிமன்ற வழக்காடு மொழியாக தமிழை ஆக்க வேண்டும்" என்று குறிப்பிட்ட முதலமைச்சர் அவர்கள், இந்தித் திணிப்புக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.**

**தேசியக் கல்விக் கொள்கை என்ற பெயரால் இந்தியைத் திணிக்க முயற்சி எடுத்தது பா.ஜ.க. அரசு. அதனையும் முதலமைச்சர் அவர்கள் ஏற்கவில்லை. "தேசியக் கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டால்தான் பள்ளிக் கல்வித் துறைக்குத் தர வேண்டிய ரூ.2000 கோடியைத் தருவோம்" என்று நிபந்தனை விதித்தார்கள். 'ரூ.2000 கோடி அல்ல, 10 ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்தாலும் தேசியக் கல்விக் கொள்கையை ஏற்க மாட்டோம்' என்று போர்ப் பிரகடனம் செய்தார். இதனை ஒன்றிய அரசு கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.**

**தமிழ்நாடு அரசின் இந்தி மொழி எதிர்ப்புப் போராட்டம் மற்ற மொழிக்காரர்களாலும் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டது. இந்தியால் எத்தனை மொழிகள் அழிந்துள்ளன என்று முதலமைச்சர் சொல்லிக் காட்டிய பட்டியல், வட மாநிலத்தவர்கள் கண்ணை லேசாகத் திறந்தது. 'தமிழ்நாடு முதலமைச்சர் சொல்வது உண்மைதான்' என்று பலரும் சமூக வலைதளங்களில் எழுதத் தொடங்கினார்கள். இந்தியா முழுக்க பலருக்கும் மொழித் திணிப்பின் கொடுமையை இது உணர்த்தியது.**

**இந்த வரிசையில் மராட்டியத்தில் நடந்த போராட்டம் என்பது மிக முக்கியமானது. மும்மொழிக் கொள்கையை அமல்படுத்தும் சட்டத்தை அம்மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. கூட்டணி அரசு கொண்டு வந்தது. அதற்கு எதிராக மராட்டிய மாநிலத்தின் முக்கியமான அரசியல் கட்சிகள் அனைத்தும் (தமிழ்நாட்டைப் போலவே) போர்க்குரல் எழுப்பின. அரசியல் ரீதியாக இருபது ஆண்டுகளாக பிளவுபட்டு இருந்த பால்தாக்கரே குடும்பமே ஒன்று பட்டது. இந்தித் திணிப்புக்கு எதிராகவும், மராட்டிய மொழியை ஆதரித்தும் மகாராஷ்டிரா முழுக்க போராட்டம் நடந்த நிலையில் மும்மொழித் திணிப்பில் இருந்து பா.ஜ.க. கூட்டணி அரசு பின்வாங்கியது.**

**மும்மொழிக் கொள்கையை மாநில அரசே முடிவு செய்யலாம் என்று முடிவெடுத்துள்ள ஒன்றிய அரசு மேலும் சில முடிவுகளை எடுக்க வேண்டும். மும்மொழித் திட்டத்தை ஏற்றுக் கொண்டால்தான் பள்ளிக் கல்வித் துறைக்குத் தர வேண்டிய பணத்தைத் தருவோம் என்ற முடிவை மாற்றிக் கொள்ள வேண்டும்.**

கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார் அவர்கள் நாடாளுமன்றத்தில் ஒரு தகவலைப் பெற்றுள்ளார். "சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ், கடந்த மூன்று ஆண்டுகளில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?" என்பது இவர் கேட்ட கேள்வி. தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம் ஆகிய மூன்று மாநிலங்களுக்கும் இந்த ஆண்டு எந்த நிதியும் அனுப்பவில்லை என்று பதில் வந்துள்ளது. மொழித்திணிப்பு என்பது தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு எத்தகைய அநீதியை இழைக்கிறது என்பதை இது காட்டுகிறது. ஒன்றிய பா.ஜ.க. அரசு தனது நடவடிக்கைகளை முற்றிலும் மாற்றியாக வேண்டும்.

**சில மாதங்களுக்கு முன் கோவை வந்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா தனது தனிப்பட்ட உரையாடலில், "தமிழ்நாடு முதலமைச்சர் சொல்லும் சில முன்னெடுப்புகள் தமிழ்நாட்டைத் தாண்டி மற்ற மாநிலங்களுக்கும் பரவுகிறது. அதுதான் நமக்கு நெருக்கடியை ஏற்படுத்துகிறது" என்று சொல்லி இருக்கிறார். அத்தகைய நெருக்கடிதான், பா.ஜ.க. அரசை பின் வாங்க வைத்துள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இங்கிருந்தபடியே இந்தியாவை இயக்கி வருகிறார் என்பதை இது உணர்த்துகிறது.**



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.7.2025) சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் பள்ளிக் கல்வித் துறைக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள 2,457 இடைநிலை ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், அ.வெற்றி அழகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், ஆசிரியர் தேர்வு வாரிய தலைவர் மற்றும் பொது நூலகத் துறை இயக்குநர் திருமதி எஸ்.ஜெயந்தி, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநிலத் திட்ட இயக்குநர் மருத்துவர் மா.ஆர்த்தி, மாநில பெற்றோர் – ஆசிரியர் கழக துணைத் தலைவர் பி.வி.பி. முத்துக்குமார், பள்ளிக் கல்வி இயக்கக இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தனியார் பள்ளிகள் இயக்கக இயக்குநர் முனைவர் பெ.குப்புசாமி, தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ. நரேஷ், ஆசிரியர் தேர்வு வாரிய உறுப்பினர் முனைவர் மு.பழனிச்சாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

### கடலூர் கிழக்கு மாவட்டத்தில்

## "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்த வேண்டும்!

### மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

*கடலூர், ஜூலை 25 -*

கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம், 23.07.2025, வியாழக்கிழமை, பிற்பகல் 12 மணியளவில், காணொளி காட்சி மூலமாக, கழக தேர்தல் பணிக் குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது.

கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., தொகுதி பார்வையாளர்கள் ஏ.அங்கையற் கன்னி, விஜயன்ராம கிருஷ்ணன், சுவை.சுரேஷ்,எம்.எம்.சிவா, அ.பாரிபாலன், முன்னாள் எம்.எல்.ஏ., துரை. கி.சரவணன், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில், கடலூர் கிழக்கு மாவட்டத்தில் 5 சட்டமன்ற தொகுதி, 1284 பூத்களில் ஓரணியில் தமிழ்நாடு என்ற கழக தலைவர் அவர்களின் அறிவிப்பினை அமல்படுத்தும் விதமாக இல்லங்கள்தோறும் கழக நிர்வாகிகள் சென்று பொது மக்களை சந்தித்து, கழகத்தில் 60 சதவீதம் புதிய உறுப்பினர்களை, கூடுதல் வேகத்துடன் சேர்த்திடல் வேண்டும். என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட கழக துணை செயலாளர்கள் அ. ஞானமுத்து ,ஆர்.சக்திவேல், சுதாசம்பத்,

ஒன்றிய செயலாளர்கள்: அ.முத்து சாமி, வி.சிவக்குமார், தங்க.ஆனந்தன், ஆர். நாராயணசாமி, கே.ஆர். ராயர், பா. திருமாவளவன், பி.சுந்தர பாண்டியன், தெ.காசி ராஜன், பி.சுப்பிரமணியன், ஆர்.விஜய சுந்தரம், த.சங்கர், ம.சோழன்,



வி.கோவிந்தசாமி, கே.நடராஜன், எம்.மனோகரன், ஏ. எஸ்.மதியழகன், டி.திருமூர்த்தி, எஸ்.செந்தில்குமார், கே.ஆர்.கோவிந்தராஜ், ஆர். ராஜேந்திரன், ஏ.எம்.மதியழகன், வெற்றிவேலு, வி.பி. பாலு, கே.ஆர்.தனஞ்செயன், கே.மகேஷ், த.ஜெய பாண்டியன்,

கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா, கடலூர் பகுதி செயலாளர்கள்: ப.நடராஜன், பா.வெங்க டேஷ், எஸ்.சலீம், மு.இளைய ராஜா, நகர கழக செயலாளர்கள் கே.ஆர்.செந்தில்குமார், த.தமிழ்ச்செல்வன், வடலூர் நகரமன்றத் தலைவர் எஸ். சிவக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வ.ஞானசேகரன், வே.விக்கிரமன்,பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.பி.ஆர். பாலமுருகன், த.ஜேம்ஸ். விஜயராகவன், இரா.தமிழரசன், ச.கல்யாணசுந்தரம், என்.டி.கணேசன், மஞ்சு, பா.கோதண்டபாணி,

பேரூர் செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் எஸ்.கணேசமூர்த்தி, குறிஞ்சிப்பாடி கு.வே.ப. ஜெய்சங்கர், சேத்தியாதோப்பு ப. மனோகரன், திருமுட்டம் பூ.செல்வகுமார், சேத்தியாதோப்பு ப.மனோகரன், அண்ணாமலை நகர் க. பழனி, லால்பேட்டை எம். அன்வர்சதாத், பரங்கிபேட்டை பேரூராட்சி மன்றத் தேன்மொழிசங்கர்,

மாவட்ட கழக பார்வையாளர்கள் டி.பழனிசாமி, ஜி.சின்னமணி, பி.வெங்கடாஜலபதி, மாவட்ட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்: இளைஞரணி ஜி.கார்த்திகேயன், மாணவரணி அப்பு ஆர்.சந்தியநாராயணன், பொறியாளர் அணி அப்பு.சந்திரசேகரன், தொண்டரணி ஆராமுது, விவசாய அணி பொன்.பன்னீர்செல்வம், விவசாய தொழிலாளர் அணி ம.இராமசாமி, மகளிர் அணி த.அமுதராணி, மகளிர் தொண்டரணி, ப.மனோரஞ்சிதம், வழக்கறிஞர் அணி பி. அருள்ஜோதி, மாநகர வழக்கறிஞர் அணி பாபு,

ஆதிதிராவிடர் நல்லக் குழு ஆர்.பரந்தாமன், இலக்கிய அணி வி.சி.சண்முகம், சிறு பான்மையினர் நல உரிமை பிரிவு எம்.எஸ்.முகமது யூனுஸ், வர்த்தக ரணி ஆர்.ரெங்கநாதன், தகவல் தொழில்நுட்ப அணி ஏ.ஜாபர் அலி, மீனவர் அணி வீ.செல்வபாரதி, அயலக அணி வாசு, இலக்கிய அணி பழனிசாமி, டி.வெங்கடாஜலபதி, கலை இலக்கிய பிரிவு, ஜி.சின்னமணி, தகவல் தொழில்நுட்ப அணி அ.முத்தமிழ்செல்வன், வி.எம்.வெற்றிசெல்வன், உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சேலம் மாநகராட்சி – கொண்டலாம்பட்டியில்

## 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்! 109 மனுக்களுக்கு உடனடித் தீர்வு!

### அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் ஆய்வு மேற்கொண்டு தகவல்!

*சேலம், ஜூலை 25-*

"உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் நேற்றைய தினம் மனு வழங்கிய 109 நபர்களுக்கு உடனடி தீர்வுகள் காணப்பட்டு நலத் திட்ட உதவிகள் வழங்கப் பட்டுள்ளது என "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நடைபெறும் இடங்களில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் ஆய்வு மேற்கொண்டு தகவல் தெரிவித்தார்.

சேலம் மாநகராட்சி, கொண்டலாம்பட்டி மண்டலம், வார்டு 45க்கு உட்பட்ட பகுதிகளுக்கு சேலம் பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள நேரு கலையரங்கம் மற்றும் ஓமலூர் பேரூராட்சி பகுதிகளுக்கு ஓமலூர் பேரூராட்சி சமுதாயக்கூடத்திலும் நடைபெற்று வரும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தா தேவி, முன்னிலையில் நேற்று (24.07.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்களால் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் 15.07.2025 அன்று தொடங்கி வைக்கப் பட்டதை தொடர்ந்து சேலம் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் தொடங்கி நடைபெற்று வருகிறது. "உங்களுடன் ஸ்டாலின்" என்ற திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் 15.07.2025 அன்று முதல் வரும் நவம்பர் மாதம் வரை நகர்ப்புறப்பகுதிகளில் 168 முகாம்களும் மற்றும் ஊரகப் பகுதிகளில் 264 முகாம்களும் என மொத்தம் 432 சிறப்பு முகாம்கள் மூலம் பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்பட உள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள கடைக்கோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறைகளின் சேவைகள் அவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகாமையிலேயே சென்று வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தில் பெறப்படும் மனுக்கள் அனைத்திற்கும் 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்கள்.

சேலம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் 23.07.2025 நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 2,366 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இதுதவிர கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கோரிக்கை விண்ணப்பமாக மொத்தம் 3,475 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, நேற்று 24.07.2025 சேலம் மாநகராட்சி, கொண்டலாம்பட்டி மண்டலம்



வார்டு - 45க்குட்பட்ட பகுதிகளுக்கு சேலம் பழைய பேருந்து நிலையம், நேரு கலையரங்கத்திலும், நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சி, செட்டிச்சாவடி பகுதிகளுக்கு உட்பட்டவர்களுக்கு செட்டிச்சாவடி, மாந்தோப்பு ஊரடி மாரியம்மன் கோவில் அருகிலும், சங்ககிரி நகராட்சி வார்டு - 1, 2, 4 க்குட்பட்ட பகுதிகளுக்கு சங்ககிரி, சத்தைப்பேட்டை, வார்டு 2 சமுதாயக்கூடத்திலும், ஓமலூர் பேரூராட்சி வார்டு 1, 2, 3, 4, 5, 6, 7க்குட்பட்ட பகுதிகளுக்கு ஓமலூர், வார்டு 10, செவ்வாய் சந்தை சாலையில் உள்ள பேரூராட்சி சமுதாயக்கூடத்திலும், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், டேனிஷ்பேட்டை பகுதிக்கு பெரியவடகம்பட்டி, சுப்ரமணி மஹாலிலும், சங்ககிரி ஊராட்சி ஒன்றியம், சின்னக்கவுண்டனூர் பகுதிக்கு குப்பனூர் நெடுஞ்சாலையில் உள்ள ஆ.கே.எஸ் மஹாலிலும் நடைபெற்று வருகிறது.

சேலம் மாநகராட்சி, நேரு கலையரங்கத்தில் நடைபெற்ற முகாமில் பொதுமக்கள் வழங்கிய மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு 102 நபர்களுக்கு சொத்துவரி ஆணைகளும், 7 நபர்களுக்கு பிறப்புச்சான்றிதழ்களும், ஓமலூர் பேரூராட்சி சமுதாயக்கூடத்தில் நடைபெற்ற முகாமில் ஒரு மாற்றுத்திறனாளிக்கு மூன்று சக்கர சைக்கிளும், ஒரு மாற்றுத்திறனாளிக்கு காதொலி கருவியும் என மொத்தம் 111 நபர்களின் மனுக்களுக்கு உடனடி தீர்வுகள் காணப்பட்டு நலத் திட்ட உதவிகள் வழங்கப் பட்டுள்ளது.

'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம் நடைபெறும் இடங்களில் நேரில் பார்வையிட்டு, பொதுமக்கள் எவ்வித சிரமமும் இன்றி தங்களது கோரிக்கை மனுக்களை வழங்கிடும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இம்முகாமில் சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையர் இளங்கோவன், அம்மாபேட்டை மண்டல உதவி ஆணையர் வேடியப்பன், அம்மாப்பேட்டை மண்டலக்குழுத் தலைவர் கே.டி. தனசேகர், வட்டாட்சியர்கள் பார்த்தசாரதி (சேலம்), ரவிக்குமார்(ஓமலூர்), ஓமலூர் பேரூராட்சித் தலைவர் திருமதி செல்வராணி ரவிச்சந்திரன், செயல் அலுவலர் சந்திரகுமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நேற்று முன்தினம் (23.07.2025) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத் தலைவர் ராஜேந்திர ரத்னூ, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு கழகத்தின் நிர்வாக இயக்குநர் கே.விவேகானந்தன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிர்வாக இயக்குநர் பி.மதுசூதன் ரெட்டி, பேரூராட்சிகளின் இயக்குநர் எம்.பிரதீப் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.